
**பிப்ரவரி – 20**

# TNPSC துளிகள்

- தமிழக முதல்வர், திருச்சி மற்றும் மதுரையில் மொத்தம் 717 கோடி ரூபாய் செலவில் TIDEL தொழில்துறைப் பூங்காக்களை நிறுவுவதற்கான அடிக்கல்லை நாட்டினார்.
- ஐக்கியப் பேரரசு அரசானது, ஐக்கியப் பேரரசு - இந்தியா இடையிலான முக்கிய வணிக உறவுகளுக்கு அவர் ஆற்றிய சேவைகளுக்காக வேண்டி டாடா குழுமத் தலைவர் N.சந்திரசேகரனுக்கு கௌரவ வீரத்திருத்தகை (நைட்ஹூட்) விருதை வழங்கியுள்ளது.
- இந்தியாவின் நான்காவது தலைமுறை நுட்பத்திலான ஆழ்கடல் நீர்மூழ்கிக் கப்பல் ஆன 'மத்ஸ்யா-6000' ஆனது, மனிதப் பாதுகாப்பு, அமைப்பின் நம்பகத்தன்மை மற்றும் அறிவியல் சாதனங்களின் தாங்கு திறன் சோதனை ஆகியவற்றில் கவனம் செலுத்தும் ஈரப்பத சோதனையை வெற்றிகரமாக நிறவு செய்துள்ளது.
- கேரள மாநில அரசானது, கடலடி சூழல் சார்ந்த அவசரநிலைகளுக்கு நடவடிக்கையை மேற்கொள்வதற்காகத் தயாராக உள்ள அதிகப் பயிற்சி பெற்ற 17 அதிகாரிகளைக் கொண்ட "கனெட்ஸ்" எனப்படும் இந்தியாவின் முதல் அனைத்து மகளிர் ஸ்கூபா டைவிங் தீயணைப்பு குழுவினைத் தொடங்கி வரலாறு படைத்துள்ளது.
- இந்தோனேசிய நாட்டு அணியானது, சீன மக்கள் குடியரசை வீழ்த்தி, 2025 ஆம் ஆண்டு பேட்மிண்டன் ஆசியக் கலப்பு அணி சாம்பியன்ஷிப் போட்டியில் முதன்முறையாக வென்றுள்ளது.
- உலகின் அதிகளவில் செயல்பாட்டில் உள்ள எரிமலைகளில் ஒன்றான இத்தாலியில் உள்ள மவுண்ட் எட்னா சமீபத்தில் வெடித்தது

# தமிழ்நாடு செய்திகள்

## NAKSHA சோதனைத் திட்டம்




- நகர்ப்புற நிலப் பதிவுகளை நவீனமயமாக்குவதற்காக வேண்டி தேசியப் புவியிடத் தகவல் அடிப்படையிலான நகர்ப்புற வாழ்விடங்களின் நில ஆய்வு (NAKSHA) என்ற ஒரு சோதனைத் திட்டமானது தஞ்சாவூரில் தொடங்கப்பட்டுள்ளது.
- மத்திய ஊரக மேம்பாட்டு அமைச்சகத்தின் நில வளத் துறையின் எண்ணிம இந்தியா நிலப் பதிவுகள் நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் இந்தத் திட்டமானது மேற்கொள்ளப்

படுகிறது.

- நகர்ப்புற நிலப் பதிவுகள் துல்லியமாகவும் புதுப்பிக்கப்பட்டதாகவும் இருப்பதை நன்கு உறுதி செய்வதையும், நகர்ப்புறக் குடிமக்களுக்கு அதிகாரம் அளிப்பதையும், சிறந்த நகர்ப்புறத் திட்டமிடலை செயல்படுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நாடு முழுவதும் சுமார் 150க்கும் மேற்பட்ட நகரங்களில் ஓராண்டிற்கு இந்த சோதனைத் திட்டம் செயல்படுத்தப்படும்.
- இந்தத் திட்டத்தின் கீழ், புவியிட ஆய்வினை மேற்கொள்ளவும் துல்லியமான சொத்துப் பதிவுகளை உருவாக்குவதற்கும் ஆளில்லா விமானங்கள் பயன்படுத்தப்படும்.
- இந்தத் தரவு ஆனது, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சொத்து வரிப் பதிவுகளுடன் ஒருங்கிணைக்கப்படும்.
- வரைபடங்களை உருவாக்குவதற்காக வேண்டி மேம்பட்ட நில அளவீட்டுச் சாதனங்கள் பயன்படுத்தப்படும்.

# தேசியச் செய்திகள்

## குடியேற்றம் மற்றும் வெளிநாட்டினர் மசோதா 2025


KEY ENHANCEMENTS IN THE BILL

- All immigration control under one agency
- Universities, hospitals and hotels must report foreign visitors
- Stringent fines and prison terms for illegal entry, over-staying, document fraud
- Airlines and transporters must verify passengers' documents or face fines
- Govt has clearer powers to restrict, deport or track foreigners
- Foreigners cannot change their names without nod

- மத்திய உள்துறை அமைச்சகம் (MHA) ஆனது, 2025 ஆம் ஆண்டு குடியேற்றம் மற்றும் வெளிநாட்டினர் மசோதாவினை அறிமுகப்படுத்த உள்ளது.
- இது வெளிநாட்டினரின் குடியேற்றம் மற்றும் பெயர்வினைக் கையாளும் தற்போதைய நான்கு சட்டங்களையும் ரத்து செய்யும்.
- முன்மொழியப்பட்ட இந்தச் சட்டம் ஆனது தற்போதுள்ள சட்டங்களுக்கு மாற்றாக முன் வைக்கப்படும்.
    - கடவுச் சீட்டு (இந்தியாவிற்குள் நுழைதல்) சட்டம், 1920
    - வெளிநாட்டினரின் பதிவுச் சட்டம், 1939
    - வெளிநாட்டினர் சட்டம், 1946; மற்றும்
    - குடியேற்றம் (போக்குவரத்து நிறுவனங்களின் பொறுப்பு) சட்டம், 2000.
- முன்மொழியப்பட்ட இந்தச் சட்டமானது, இந்தியாவிற்குள் வெளிநாட்டினரின் நுழைவு, வெளியேற்றம் மற்றும் நடமாட்டத்தினைக் கட்டுப்படுத்த அல்லது ஒழுங்குபடுத்தச்

செய்வதற்கு மத்திய அரசிற்கு அதிகாரத்தை வழங்குகிறது.

- இந்தப் புதிய மசோதாவில் அங்கீகரிக்கப்படாத உள்நுழைவிற்கு என்று சுமார் 5 லட்சம் ரூபாய் வரை அபராதமும், போலி கடவுச் சீட்டிற்கு 10 லட்சம் ரூபாய் வரை அபராதமும் விதிக்கப்படுகிறது.
- இதில் வெளிநாட்டுக் குடிமக்களை சேர்க்கைக்கு அனுமதிக்கும் பல்கலைக்கழகங்கள், மருத்துவமனைகள் மற்றும் பிற மருத்துவ நிறுவனங்களின் பங்கு, கடவுச் சீட்டு மற்றும் நுழைவு இசைவுச் சீட்டுகள் தொடர்பான விவகாரங்களுடன் குறிப்பிடப் படும்.

## 2023-24 ஆம் ஆண்டில் இந்தியாவின் பணக்கார அரசியல் கட்சி

**Key Points**

- A large portion of the income for national parties came from donations through electoral bonds
- - While the BJP received the highest amount, securing Rs 1,685.63 crore, the Congress received Rs 828.36 crore, and the Aam Aadmi Party (AAP) Rs 10.15 crore
- Among the national parties, six declared receiving a total of Rs 2,669.87 crore from donations and contributions
- 'The BJP declared a total income of Rs 4,340.473 crore during FY 2023-24 but spent only 50.96 per cent of it, amounting to Rs 2,211.69 crore. The total income of Congress was Rs 1,225.12 crore, while its expenditure for the year was Rs 1,025.25 crore or 83.69 per cent of its total income'
- The audit reports of CPI(M), Congress and BJP were submitted with delays ranging from 12 to 66 days

- 2023-24 ஆம் நிதியாண்டில் 43,00 கோடி ரூபாய்க்கு மேல் வருமானம் ஈட்டிய பணக்கார கட்சியாக பா.ஜ.க உருவெடுத்தது.
- அதைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சி 1200 கோடி ரூபாய்க்கு மேல் வருமானம் ஈட்டி உள்ளது.
- CPI(M) கட்சியின் மொத்த வருமானம் ஆனது 167.636 கோடி ரூபாயாக இருந்த நிலையில், அக்கட்சி அதன் வருவாயில் 75.93% ஆன 127.283 கோடி ரூபாயை செலவிட்டது.
- 6 தேசியக் கட்சிகள் (BJP, INC, CPI(M), AAP, BSP மற்றும் NPEP) இந்தியா முழுவதிலுமிருந்து 5820.912 கோடி ரூபாய் மொத்த வருவாய் ஈட்டியதாக அறிவித்துள்ளன.

# சர்வதேசச் செய்திகள்


## காங்கோ ஜனநாயகக் குடியரசில் குரங்கம்மை Clade Ib பெருந்தொற்று

- காங்கோ ஜனநாயகக் குடியரசில் (DRC) குரங்கம்மை clade Ib மாற்றுருவின் விரைவான பரவல் ஆனது முக்கியமாக (83.4%) பாலியல் தொழிலாளர்களுடன் தொடர்புடையது.
- இந்த ஆய்வுக் காலத்தில் மிக ஒட்டு மொத்தமாக, தொழில்முறை ரீதியிலான பாலியல் தொழிலாளர்களில் 200/751 (26.6%) பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- 2023 ஆம் ஆண்டிலிருந்து, அண்டை நாடுகளுக்கும் பரவியுள்ளப் பெருந்தொற்றில் DRC நாட்டில் சுமார் 50,000க்கும் மேற்பட்ட சந்தேகத்திற்கிடமான mpox பாதிப்புகள் பதிவாகி உள்ளது.
- 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையில், சுற்றி உள்ள 17 சுகாதாரப் பகுதிகளிலிருந்து 670 குரங்கம்மை பாதிக்கப்பட்ட நோயாளிகள்

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

- ❖ இந்தப் பாதிப்புகளில், 52.4% பெண்கள், மற்றும் 47.6% ஆண்கள் ஆவர்.

**Countries with Confirmed or Presumed Clade I Mpox Cases, Central and Eastern Africa**




## முனிச் பாதுகாப்பு மாநாடு 2025

msc Munich Security Conference


- ❖ 61வது முனிச் பாதுகாப்பு மாநாடு (MSC) ஆனது ஜெர்மனியின் முனிச் நகரில் நடத்தப் பட்டது.
- ❖ பனிப்போரின் உச்ச கட்ட காலத்தின் போது, ஜெர்மன் நாட்டின் ஒரு அதிகாரி மற்றும் வெளியீட்டாளர் எவால்ட்-ஹெய்ன்ரிச் வான் க்ளீஸ்ட் என்பவரால் MSC நிறுவப்பட்டது.
- ❖ 1963 ஆம் ஆண்டில் தொடங்கி, இந்த மாநாடு ஆனது அதன் ஆரம்பத்தில் இராணுவப் பிரச்சினைகளில் மட்டுமே கவனம் செலுத்தியது என்பதோடு இதில் சில மேற்கத்திய நாடுகளும் அவற்றின் உயர் அதிகாரிகளுமே பிரதானமாக கலந்து கொண்டனர்.
- ❖ 1991 ஆம் ஆண்டில் பனிப்போர் முடிவடைந்த பிறகு, இந்த மாநாடு ஆனது அதன் செயல்

பாட்டு நிரலைப் பாதுகாப்பு மற்றும் காவலுக்கு அப்பால் பருவநிலை மாற்றம் மற்றும் புலம்பெயர்வு போன்ற பிரச்சினைகளை உள்ளடக்கியதாக விரிவுபடுத்தியது.

- இது ரஷ்யா, இந்தியா மற்றும் சீனா உள்ளிட்ட கிழக்கு நாடுகளின் தலைவர்களையும் இதில் பங்கேற்பதற்கு அழைப்பு விடுக்கத் தொடங்கியது.
- ஆனால் 2023 ஆம் ஆண்டில், 20 ஆண்டுகளில் மிக முதல் முறையாக, ரஷ்யா இந்த நிகழ்வுக்கு அழைக்கப்படவில்லை.

## ICD-11 தொடரின் 2025 ஆம் ஆண்டு பதிப்பு - WHO

- உலக சுகாதார அமைப்பு (WHO) ஆனது, 2025 ஆம் ஆண்டிற்கான, சர்வதேச நோய்கள் வகைப்பாட்டுத் தொடரின் (ICD-11) 11வது திருத்தப் பதிப்பை வெளியிட்டுள்ளது.
- இது நோய்கள், காயங்கள் மற்றும் உயிரிழப்பிற்கான காரணங்களைக் கண்டறிதல், அறிக்கையிடுதல் மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றில் உலகெங்கிலும் உள்ள சில சுகாதார வல்லுநர்கள் பயன்படுத்தும் மொழியைத் தரநிலையாக்கும் கருவியாகும்.
- அதன் புதிய அம்சங்கள் ஆனது, தேசியச் சுகாதார அமைப்புகளில் (எ.கா. மேம்பட்ட இயற்கை மொழியிலான முறையாக்கம்-NLP மற்றும் செயலி நிரலாக்க இடைமுகம்-API) அடிப்படையிலான நிரலாக்க முறை) பயன்பாட்டுத் தன்மை, துல்லியத் தன்மை மற்றும் பயன்பாட்டின் எளிமை ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப் பட்டுள்ளது.
- ஆயுர்வேதத்தின் பாரம்பரிய மருத்துவ நிலைமைகள் மற்றும் சித்த மருத்துவம் மற்றும் யுனானி உள்ளிட்ட பாரம்பரிய மருத்துவ முறைகள் போன்ற அதனுடன் தொடர்புடைய பாரம்பரிய மருத்துவ முறைகளை உள்ளடக்கிய ஒரு மிகவும் புதிய தொகுதியானது பாரம்பரிய மருத்துவ முறைகளின் முறை சார் கண்காணிப்பை செயல்படுத்துகிறது.
- இந்தியாவில், மத்திய சுகாதார நுண்ணறிவு வாரியம் (CBHI) ஆனது, ICD தொடர்பான நடவடிக்கைகளுக்கான உலக சுகாதார அமைப்பின் ஒத்துழைப்பு மையமாக செயல் படுகின்ற சுகாதார அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு நிறுவனம் ஆகும்.




## திட்டம் 300 ஆப்பிரிக்கா எரிசக்தி உச்சிமாநாடு


- திட்டம் 300 ஆப்பிரிக்கா எரிசக்தி உச்சி மாநாடு ஆனது தான்சானியாவின் டார் எஸ்

சலாம் நகரில் நடைபெற்றது.

- இது தான்சானியா ஐக்கியக் குடியரசு, ஆப்பிரிக்க ஒன்றியம், ஆப்பிரிக்க மேம்பாட்டு வங்கிக் குழுமம் மற்றும் உலக வங்கிக் குழுமம் ஆகியவற்றால் நடத்தப்பட்டது.
- இது திட்டம் 300 என அழைக்கப்படுகின்ற 2030 ஆம் ஆண்டில் 12 ஆப்பிரிக்க நாடுகளில் வசிக்கும் 300 மில்லியன் மக்களுக்கு மின்சார வசதியை வழங்குவதற்கான இலக்கைப் பகுப்பாய்வு செய்தது.




## உப்பு பற்றிய WHO வழிகாட்டுதல்கள்




- உலக சுகாதார அமைப்பு (WHO) ஆனது உப்புகளுக்கு மாற்றாக குறைந்த சோடியம் உள்ளடக்கம் கொண்ட மாற்றுகளைப் பயன்படுத்தப் பரிந்துரைக்கும் வழிகாட்டுதல் மீதான தொகுப்பை வெளியிட்டுள்ளது.
- WHO ஆனது ஒரு நாளைக்கு சுமார் 2 கிராமுக்கு குறைவாக என்ற அளவில் சோடியம் உட்கொள்வதின் அளவினை குறைக்குமாறு பரிந்துரைத்துள்ளது.
- தற்போது, வழக்கமானச் சமையலுக்கு பயன்படுத்தும் தூள் உப்பு/உப்பிற்குப் பதிலாக (சோடியம் குளோரைடு) பொட்டாசியம் குளோரைடு (KCl) போன்ற குறைந்த சோடியம் உள்ளடக்கம் கொண்ட உப்பு மாற்றுகளைப் பயன்படுத்த பரிந்துரை செய்துள்ளது.
- இந்தப் பரிந்துரையானது வயது வந்த இளம் பருவத்தினருக்கே மட்டுமே பொருந்தும்


(கர்ப்பிணிப் பெண்கள் அல்லது குழந்தைகளுக்கு அல்ல).

- இது சிறுநீரகக் குறைபாடுகள் அல்லது பொட்டாசியம் வெளியேற்றத்திற்குச் சிக்கலை ஏற்படுத்தக் கூடிய பிற உடல் உபாதைகள் அல்லது நிலைமைகள் உள்ள நபர்களுக்குப் பொருந்தாது.
- உலகளவில் ஒவ்வோர் ஆண்டும், மோசமான உணவு முறை காரணமாக சுமார் எட்டு மில்லியன் உயிரிழப்புகள் பதிவாகின்றன என்பதோடு 1.9 மில்லியன் உயிரிழப்புகள் ஆனது அதிக சோடியம் உட்கொள்வதால் ஏற்படுகின்றன.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## புவியின் உட் கருவத்தின் இயக்கவியல்

- புவியின் உட்கருவமானது அதன் திரவ வெளிக் கருவத்துடனான அதன் எல்லையில் சிதைவடைகிறது என்பதற்கான சில ஆதாரங்கள் சமீபத்திய ஆய்வுகளில் கண்டறியப் பட்டு ள்ளது.
- புவியின் உட்கருவத்தின் தநனிச்சையான சுழற்சியின் ஒரு வேகமானது குறைவதாகத் தோன்றுகிறது.
- புவியின் இந்த உட்கருவமானது சுமார் 1,500 மைல்கள் அகலமுள்ள ஒரு சூடான, மிகப் பெரும்பாலும் திடமான இரும்பு கோளம் ஆகும்.
- உட்கருவத்தின் அருகிலுள்ள மேற்பரப்பின் கட்டமைப்பு மாற்றங்களுக்கு உள்ளாகிறது என்று கண்டுபிடிப்புகள் தெரிவிக்கின்றன.
- இந்த மாற்றங்கள் ஆனது அதன் சுழற்சியில் தாக்கத்தினை ஏற்படுத்தலாம் மற்றும் ஒரு நாளின் நீளத்தின் மீது கூட தாக்கத்தினை ஏற்படுத்தக் கூடும்.
- உள் மற்றும் வெளிப்புறக் கருவங்களுக்கு இடையிலான தொடர்புகள் ஆனது, இந்த மாற்றங்களுக்கான ஓர் உந்து சக்தியாக இருப்பதாக நம்பப்படுகிறது.




## கிரேவ்ஹாக் அமைப்பு

- கிரேவ்ஹாக் கலப்பின நிலம் விட்டு வானில் உள்ள இலக்கைத் தாக்கும் ஏறிகணை


என்ற ஒரு புதிய ஆயுத அமைப்பை உக்ரைன் வாங்கியதாக கூறப்படுகிறது.

- இந்த அமைப்பினை ஐக்கியப் பேரரசு ஆனது டென்மார்க்குடன் இணைந்து உருவாக்கி உள்ளது.
- இது ஐக்கியப் பேரரசினால் வடிவமைக்கப்பட்ட "எளிதில் சுமந்து செல்லக் கூடிய வான் வழிப் பாதுகாப்பு அமைப்பு" என்று விவரிக்கப் பட்டுள்ளது.
- இது வான்வழி எறிகணையினை நிலக் கட்டுப்பாட்டு அடிப்படையில் இயங்கும் வான் வழிப் பாதுகாப்பு அமைப்பாக மாற்றியமைக்கக் கூடியது.
- இந்த எறிகணைகள் சுமார் மேக் 2.5 வரையிலான ஒரு வேகத்தை அடையக் கூடியவை என்பதோடு, மிகத் தோராயமாக 12 மைல் தொலைவில் உள்ள இலக்குகளையும் தாக்கி அழிக்கும்.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## இந்தியாவின் கார்பன் பிடிப்பு 2025





- இந்தியாவில் பசுமைப் பரவலானது, ஆண்டுதோறும் வெளியிடப்படுவதை விட கடந்த பத்தாண்டுகளில் அதிகமான கார்பனை உறிஞ்சியுள்ளது.
- ஆனால் வறட்சி போன்ற தீவிர பருவநிலை நிகழ்வுகளின் போது கார்பன் பிடிப்பு வீதம்

குறைகிறது.

- பச்சைத் தாவரங்கள் ஒளிச்சேர்க்கை மூலம் வளிமண்டலத்தில் இருந்து கார்பன் டை ஆக்சைடை ($CO_2$) உறிஞ்சி சுவாசத்தின் மூலம் மீண்டும் காற்றில் வெளியிடுகின்றன.
- நிகரச் சூழலமைப்பு பரிமாற்றம் (NEE) ஆனது ஆண்டிற்கு 380 முதல் 530 மில்லியன் டன் கார்பன் வரை உள்ளதாக மதிப்பிடப்படுகிறது.
- அவை (பச்சை தாவரங்கள்) ஆண்டுதோறும் சுமார் 210 மில்லியன் டன்கள் கார்பனை வெளியிட்டு, கார்பன் மூலங்களாக செயல்படுகின்றன.

## ஆர்க்டிக் வடத் துருவக் காடுகள் மண்டலம் – கார்பன் உமிழ்வு மூலம்




- மரங்களற்ற துந்த்ரா, வடத் துருவக் காடுகள் மற்றும் 26 மில்லியன் சதுர கிலோமீட்டர் பரப்பளவில் பரவியுள்ள ஈரநிலங்களை உள்ளடக்கிய ஆர்க்டிக் வடத் துருவக் காடுகள் மண்டலம் ஆனது குறிப்பிடத்தக்க மாற்றத்திற்கு உட்பட்டுள்ளது.
- இந்தப் பகுதியின் 40 சதவீதப் பரப்பானது அவை உறிஞ்சுவதை விட அதிக கார்பன் டை ஆக்சைடை வளிமண்டலத்தில் வெளியிடுவதால் கார்பன் உமிழ்விற்கான மூலமாக மாறியுள்ளது.
- இது ஆயிரம் ஆண்டுகளாக ஒரு கார்பன் மடுவாக இருந்த அதன் இயல்பில் இருந்து அது மாறுவதைக் குறிக்கிறது.
- இந்த மாற்றம் என்பது 1990 ஆம் ஆண்டிற்கு மிகவும் முன்பே தொடங்கியிருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.
- அலாஸ்கா (44 சதவீதம்), வட ஐரோப்பா (25 சதவீதம்), கனடா (19 சதவீதம்), சைபீரியா (13 சதவீதம்) ஆகிய இடங்களில் கார்பன் உமிழ்வு மூலப் பகுதிகள் பரவியுள்ளன.
- ஆர்க்டிக் வட துருவக் காடுகள் மண்டலம் ஆனது, பிராந்தியத்தின் 49 சதவிகிதம் ஆனது நீண்ட கால தாவர வளர்ச்சிப் பருவங்கள் மற்றும் அதிகரித்த தாவரப் பரவலுடன் குறிப்பிடத்தக்க "பசுமைத் தன்மையை" கண்டது.
- இருப்பினும், இந்தப் பகுதியில் 12 சதவீதம் மட்டுமே ஆண்டுதோறும் நிகர கார்பன் மடு பகுதியாகச் செயல்படுகிறது.
- ஒரு கார்பன் மடு பகுதியானது, அது வெளியிடுவதை விட, வளிமண்டலத்தில் இருந்து அதிக கார்பனை உறிஞ்சுகிறது.

- ஒரு கார்பன் உமிழ்வு மூலமானது, அது உறிஞ்சுவதை விட அதிக அளவில் கார்பனை வெளியிடுகிறது.
- நிலத்தடி உறைபனி என்பது தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக 0 டிகிரி செல்சியஸ் அல்லது அதற்கும் கீழே உள்ள வெப்பநிலையில் பனியில் புதைந்துள்ளக் கார்பனை அதிக அளவு சேமித்துள்ள மண் அல்லது பாறை என வரையறுக்கப் படுகிறது.

## செங்கடல் ஈலாட் வளைகுடாவில் உள்ள பவளப் பாறைகள்




- ஹோலோசீன் காலத்தின் பிற்பகுதியில் ஈலாட் / அகாபா என்ற வளைகுடாவில் பவளப் பாறை வளர்ச்சியில் மிகவும் குறிப்பிடத்தக்க ஒரு இடை நிறுத்தமானது பதிவானதை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- ஈலாட் வளைகுடாவில் உள்ள பவளப்பாறைகள் சுமார் 4,400 முதல் 1,000 ஆண்டுகளுக்கு முன்னதாக அதன் வளர்ச்சியில் 3,000 ஆண்டு கால 'முடக்கத்தினை' எதிர் கொண்டு உள்ளது.
- உலகம் குளிர்ச்சியடைந்ததால் ஏற்பட்டிருக்கக் கூடிய, கடல் மட்டத்தின் ஒரு தற்காலிக வீழ்ச்சி காரணமாக இது ஏற்பட்டிருக்கலாம்.
- வளர்ச்சியில் மிக நீண்டதொரு இடைநிறுத்தம் இருந்த போதிலும், பவளப் பாறைகள் அவற்றின் இயற்கையான நெகிழ்தன்மையை வெளிப்படுத்தி ஆழ்கடலில் இருந்து அது மீண்டும் வெளித்தோன்றி இறுதியாக மீண்டும் வளரத் தொடங்கின.
- பவளப் பாறைகளின் பன்முகத்தன்மை மற்றும் மிகுதியானது அந்த மிகவும் சிறிய ஒரு இடைவெளிக்கு முன்னும், பின்னும் குறிப்பிடத்தக்க நிலைத்தன்மையைக் காட்டியது.


# மாநிலச் செய்திகள்

## இந்தியாவின் முதல் முதியோர் ஆணையம்

- கேரளா இந்தியாவின் முதல் முதியோர் ஆணையத்தினை நிறுவ உள்ளது.
- இது மிக விரைவாக அதிகரித்து வரும் முதியோர் மக்கள்தொகையினால் ஏற்படும் பல சவால்களை நிவர்த்தி செய்வதையும், முதியோர்களின் உரிமைகள், நலன்புரி மற்றும் சமூக ஒருங்கிணைப்பை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2011 ஆம் ஆண்டில் அங்கு சுமார் 12.6 சதவீதமாக இருந்த 60 வயது மற்றும் அதற்கு

மேற்பட்டவர்களின் விகிதம் ஆனது, 2036 ஆம் ஆண்டில் 22.8 சதவீதமாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- கேரளாவின் முதியோர் மக்கள் தொகை ஆனது ஆண்டிற்கு சுமார் 4 சதவீத விகிதத்தில் அதிகரித்து வருகிறது என்பதோடு 3.3% என்ற தேசிய சராசரியினை விட இது அதிகம் ஆகும்.
- 2036 ஆம் ஆண்டில் கேரளாவின் முதியோர் மக்கள் தொகையானது 8.4 மில்லியனை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்த ஆணையம் ஓர் உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரங்கள் உட்பட குறிப்பிடத் தக்க அதிகாரம் கொண்ட ஒரு சுயாதீன அமைப்பாக செயல்படும்.
- இது குறைகளை விசாரித்து பாதுகாப்பு நடவடிக்கைகளைச் செயல்படுத்தும்.
- மாநில அரசாங்கத்தின் செயலாளர் பதவியை வகிக்கும் ஒரு முழு நேரத் தலைவர் தலைமையில் இந்த ஆணையம் செயல்படும்.
- இதில் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக்காலம் ஆனது மூன்று ஆண்டுகளாக இருக்கும் என்பதோடு சரியான நேரத்தில் அடுத்தத் தலைவர் மற்றும் உறுப்பினர் நியமிக்கப் படாவிட்டால் அவர்களின் பதவிக் காலம் ஆனது ஆறு மாதங்கள் வரை நீட்டிக்கப்படும்.
- கூடுதலாக, இந்த ஆணையத்தில் பட்டியலிடப்பட்டச் சாதியினர் அல்லது பட்டியலிடப் பட்ட பழங்குடியினரைச் சேர்ந்த குறைந்தபட்சம் ஒரு உறுப்பினரும் மற்றும் ஒரு பெண் உறுப்பினரும் இருக்க வேண்டும் என்ற நிலையில் இது பல்வேறு சமூகப் பிரிவினரின் பிரதிநிதித்துவங்களை உறுதி செய்கிறது.


**Kerala to Establish State Senior Citizen Commission to Safeguard Elderly Rights**


- Kerala plans to form a Senior Citizen Commission via an ordinance.
- Aimed at addressing senior citizens' issues like neglect, exploitation, rehabilitation, and social inclusion.
- The commission will have a chairperson and three members, ensuring representation of women and SC/ST communities.
- Based in Thiruvananthapuram, it will advise on welfare policies, provide legal aid, and promote community engagement.
- Chairperson and members serve three years, with allowances for meetings.

## திருமணம் ரீதியான பலாத்காரம் குறித்த சத்தீஸ்கர் உயர்நீதிமன்ற தீர்ப்பு


- 15 வயதிற்கு மேற்பட்டவராக அவர் இருந்தால், கணவர் அவரது சம்மதத்தைப் பொருட் படுத்தாமல் தனது மனைவியுடன் பாலியல் உறவில் ஈடுபட்டதற்காக, பலாத்காரம் அல்லது இயற்கைக்கு மாறான ஒரு பாலியல் குற்றச்சாட்டு சுமத்தப்பட முடியாது என்று சத்தீஸ்கர் உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.
- திருமணம் ரீதியான பலாத்காரம் தொடர்பாக சட்டத்தில் உள்ள ஒரு பாதுகாப்பானது, "இயற்கைக்கு மாறான பாலியல் உறவினை" ஒரு குற்றமாக்கிய இந்திய தண்டனைச் சட்டத்தின் (IPC) 377 பிரிவிற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.
- பாலியல் வன்கொடுமையை குற்றமாக அறிவிக்கும் 375வது பிரிவானது, மனைவி 18 வயதை எட்டும் போது, "ஓர் ஆண் தனது சொந்த மனைவியுடன் பாலியல் உடலுறவு

அல்லது பாலியல் செயல்களுக்கு" இந்த விதி நீட்டிக்கப்படவில்லை என்று கூறுகிறது.

- மனைவியின் வயது 15 வயதுக்குக் குறைவாக இல்லாதபட்சத்தில், கணவரின் எந்த ஒரு பாலியல் உடலுறவு அல்லது பாலியல் செயலையும் கற்பழிப்பு என்று கூற முடியாது.
- 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில், மும்பை உயர் நீதிமன்றம் ஆனது, இது போன்ற வழக்குகளில் சம்மதம் பெறல் என்ற ஒரு கருத்தினை முன்வைத்தலை நிராகரித்து, 15 வயதிற்கு உட்பட்ட மனைவியுடன் அவரின் சம்மதத்துடன் உடலுறவு கொள்வது என்பது பலாத்காரம் /பாலியல் வன்கொடுமை என்று தீர்ப்பளித்தது.
- 15 வயதிற்கு உட்பட்ட மனைவி ஒருவர் தான் பாலியல் ரீதியான வன்கொடுமை செய்யப் பட்டதாக குற்றம் சாட்டியதை அடுத்து, குற்றவாளி என நிரூபிக்கப்பட்ட ஒருவருக்கு 10 ஆண்டு சிறைத்தண்டனையை நாக்பூர் அமர்வு உறுதி செய்தது.
- மனைவியுடன் இயற்கைக்கு மாறான உடலுறவு ஆனது பலாத்காரம்/கற்பழிப்பு அல்ல என்றும், அத்தகைய விவகாரங்களில் மனைவியின் ஒப்புதல் பெறுவது என்பது மிகவும் பொருத்தமற்றது என்றும் கடந்த ஆண்டு மத்தியப் பிரதேச உயர் நீதிமன்றம் ஆனது தீர்ப்பளித்தது.




## TrailGuard AI அமைப்பு





- ஒடிசா மாநிலத்தின் சிமிலிபால் புலிகள் வளங்காப்பகத்தில், அதன் காடுகளுக்குள் வேட்டையாடுபவர்கள் மற்றும் வன விலங்குகளின் நடமாட்டம் பற்றிய சில நிகழ்நேர எச்சரிக்கைகளை அனுப்புகின்ற, ஒரு செயற்கை நுண்ணறிவால் (AI) இயக்கப்பட்ட 100 முதல் 150 புகைப்படக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.
- அவை மிகவும் ஒரு இயல்பான நிலையில் குறைந்த ஆற்றல் பயன்பாட்டு முறையில்

இயங்குகின்றன ஆனால் அவை நடமாட்டத்தை கண்டறிந்து புகைப்படத்தை எடுக்கும் போது உயர் ஆற்றல் பயன்பாட்டு முறைக்கு மாறுகின்றன.

- அந்தப் புகைப்படக் கருவியானது பின்னர் செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான கண்டறிதலை மேற்கொள்கிறது அதாவது படத்தில் உள்ள 'விலங்குகள்', 'மனிதர்கள்' மற்றும் 'வாகனங்கள்' போன்ற பல்வேறு பொருள்களை வேறுபடுத்துவதற்காக என்று அதனுள் உள்ள சில்லுகளைப் பயன்படுத்துகிறது.
- செயற்கை நுண்ணறிவு தேவையான சூழலில் ஒரு ஒளிப்படக் கருவியுடன் இணைக்கப் பட்ட தகவல் தொடர்பு அமைப்பைப் பயன்படுத்தி சுமார் 30 - 40 வினாடிகளில் ஒரு புகைப்படத்தினை இறுதிப் பயனருக்குத் தன்னியக்கமாக அனுப்புகிறது.
- TrailGuard AI ஆனது, சிமிலிபாலில் உள்ள வனவிலங்கு அதிகாரிகளுக்கு வேண்டி கடந்த 10 மாதங்களில், 96 வேட்டையாடுபவர்களைக் கைது செய்து, 86க்கும் மேற்பட்ட நாட்டுத் துப்பாக்கிகளைக் கைப்பற்ற உதவியுள்ளது.

# முக்கிய தினங்கள்

## உலக எறும்புத் திண்ணி தினம் - பிப்ரவரி 15




- இந்தத் தினமானது, எறும்புத் திண்ணி என்ற தனித்துவமான பாலூட்டி இனங்களைப் பற்றிய விழிப்புணர்வினை வளர்ப்பதில் அதன் ஆர்வலர்களை ஒன்றிணைப்பதற்கு ஒரு வாய்ப்பாகும்.
- செதில்கள் கொண்ட பாலூட்டி இனம் இது மட்டுமேயாகும்.
- இவைகளுக்குப் பற்கள் இல்லை எனவே இவை எறும்புகள் மற்றும் கரையான்களை மட்டுமே உட்கொள்கின்றன.
- ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவில் தலா நான்கு வகைகளுடன் உலகளவில் மொத்தம் எட்டு வகையான எறும்பு திண்ணிகள் காணப்படுகின்றன.
- எறும்புத் திண்ணி இனத்தில் இந்திய எறும்புத் திண்ணி மட்டுமே ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் காணப்படுகிறது.

- தடிமனான வால் கொண்ட எறும்புத் திண்ணி மற்றும் செதில்கள் கொண்ட எறும்புத் திண்ணிகள் என்று வெகுவாக அழைக்கப்படும் இந்திய எறும்புத் திண்ணி (மணிஸ் கிராசிகௌடாட்டா) ஆனது, இந்திய துணைக் கண்டத்தை பூர்வீகமாகக் கொண்டது.
- இது 1972 ஆம் ஆண்டு இந்திய வனவிலங்கு (பாதுகாப்பு) என்ற சட்டத்தின் முதலாவது அட்டவணையின் கீழ் பாதுகாக்கப்படுகிறது மற்றும் அருகி வரும் நிலையில் உள்ள வனவிலங்குகள் மற்றும் தாவரங்களின் சர்வதேச வர்த்தகம் மீதான ஒப்பந்தத்தின் (CITES) 1 வது பட்டியலில் பட்டியலிடப் பட்டுள்ளது.
- இது IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் 'மிக அருகி வரும் ஒரு உயிர் இனம்' என்று வகைப்படுத்தப் பட்டுள்ளது.

### உலகச் சுற்றுலா நெகிழ்திறன் தினம் - பிப்ரவரி 17





- இத்தினமானது பயணம் மற்றும் சுற்றுலாத் துறையின் தகவமைப்பு மற்றும் ஏற்புத் தன்மையை நினைவு கூரும் வகையில் அனுசரிக்கப்படுகிறது.
- இத்தினமானது பெருந்தொற்றுகள், பொருளாதார நெருக்கடிகள் மற்றும் சுற்றுச்சூழல் மாற்றங்கள் போன்ற சவால்களை சமாளிக்கக் கூடிய, தொடர்ச்சியான பொருளாதார வளர்ச்சி, கலப்புக் கலாச்சார பரிமாற்றம் மற்றும் நிலைத் தன்மையை உறுதி செய்யும் ஒரு தகவமைப்பு மிக்க சுற்றுலாத் துறையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.
- இத்தினத்தின் அனுசரிப்பானது, எதிர்காலத்தில் ஏற்படும் இடையூறுகளுக்கு எதிராக சுற்றுலாத் துறையை வலுப்படுத்தும் உத்திகளை உருவாக்குவதற்கு உலக நாடுகளை ஊக்குவிக்கிறது.
- நீடித்த நிலையான சுற்றுலாவானது வறுமைக் குறைப்பு, வேலை வாய்ப்பு உருவாக்கம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றை ஆதரிக்கிறது.

## இதரச் செய்திகள்

### வலைதள முடக்க உத்தரவு


- தொலைத்தொடர்புத் துறைக்கு மத்தியத் தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகத்திந மூலம் அளிக்கப்பட்ட பரிந்துரை மூலம் விகடன் பத்திரிகையின் வலைதளம் ஆனது இந்தியாவில் முடக்கப்பட்டது.
- 2021 ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்ப விதிகளின் கீழான, அரசுத் துறைகளுக்கு இடையேயான ஒரு குழுவானது அந்த குறிப்பிட்ட ஒரு கேளிக்கைப் படத்தினை மட்டும் முடக்குவது குறித்து விசாரணை நடத்தி வந்தது.

- வாசகர்கள் அதன் தளத்தினை அணுகுவதற்கு அந்தப் பத்திரிகை நிறுவனமானது ஒரு மாற்று தளத்தை அமைத்துள்ளது.




# இதரச் செய்திகள்

## 19வது உலகின் 500 முன்னணி நிறுவனங்கள் அறிக்கை 2025




- ஆப்பிள் நிறுவனம் ஆனது, 574.5 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்புடன் மீண்டும் உலகின் மிகவும் மதிப்புமிக்க நிறுவனமாக இடம் பெற்றுள்ளது.
- இதில் மைக்ரோசாப்ட் நிறுவனமானது, சுமார் 461 பில்லியன் அமெரிக்க டாலர்களுடன் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- இதில் கூகிள் நிறுவனமானது 413.0 பில்லியன் அமெரிக்க டாலர்களுடன் மூன்றாவது இடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து அமேசான் மற்றும் வால்மார்ட் போன்ற இதர நிறுவனங்கள் இடம் பெற்றுள்ளன.
- டிக் டாக் / டூயின் மற்றும் முகநூல் ஆகிய இரண்டும் 2024 ஆம் ஆண்டில் பெற்ற 7 மற்றும் 8 வது இடத்தை மீண்டும் பிடித்துள்ளன.
- 2014 ஆம் ஆண்டில் இந்தப் பட்டயலில் முதன்முதலில் மதிப்பிடப்பட்ட போது முன்னணி 500 நிறுவனங்களில் 424வது இடத்தைப் பிடித்த, NVIDIA நிறுவனம் ஆனது தற்போது முதல்முறையாக முதல் 10 இடங்களுக்குள் இடம் பெற்றுள்ளது.

- இன்ஃபோசிஸ் நிறுவனம் 132வது இடத்திலும், HDFC வங்கி 164 வது இடத்திலும் உள்ளன.
- இதில் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக, WeChat நிறுவனம் ஆனது நிறுவன மதிப்பு வலிமைக் குறியீட்டுடன் உலகின் வலிமையான நிறுவனமாக உள்ளது.
- நைக் உலகின் இரண்டாவது வலுவான நிறுவனமாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★